# தமிழ்க் காப்பியங்களும் பண்பாட்டு அசைவுகளும் : ஆய்வுக்கோவை (தொட்டுக் காட்டுவதும் தொடாமல் விட்டதும்) [Tamil Epics and Cultural Movements: A Review (Touching and Not Touching)]

*ப.லெட்சுமி | P. Lakshmi*[32]

**Abstract:** The paper describes leading to research trends of the tamiḻk kāppiyaṅkaḷum paṇpāṭṭu acaivukaḷum āyvukkōvai, the book contains 127 research paper about the epic literature in Tamil. Though, the Tamil have many genres of literature, the epic genre is special, like the moon in the sky which is engulf of the thousands of hundreds of stars, the paper briefly also.

மனித சமுதாயத்தை மனத்திற் கொண்டு அவனை உளமார்ந்த / நெறியார்ந்த வாழ்க்கைக்கு அழைத்துச் செல்வன இலக்கியங்கள். அவனுக்கு அடிப்படையாக அமைய வேண்டிய மனிதப் பண்புகளைக் கோடிட்டுக் காட்டுவதோடு அவனை மேனோக்கிச் செலுத்தும் உச்சக்கட்ட/ உயர்வான நெறிமுறைகளை விரிவுபடுத்திக் காட்டும் கடப்பாடுடையன காப்பிய இலக்கியங்கள். ஆயிரமாயிரம் ஆண்டுகள் கழிந்தாலும் யுகங்கள் பல கடந்தாலும் காலத்தை வென்று நிற்கும் காப்பியங்கள் இலக்கிய வானில் தனியொளி பரப்புவன வாகும். தமிழ் மொழியில் மட்டுமல்லாது உலகத்தின் அனைத்து மொழிகளிலும் காப்பியங்கள் தனக்கான இடத்தைத் தக்க வைத்துள்ளதை ஆய்வுகள் மெய்ப்பிக்கின்றன.இக்காப்பியங்கள் அனைத்திலும் ஊடாடி நிற்பன சமயச் சிந்தனைகளே என்பதை இலக்கிய விமர்சகர்கள் பலரும் முன்வைக்கின்றனர்.

**குறிச்சொற்கள்** : தமிழ்க் காப்பியம், பண்பாடு, அசைவு, ஆய்வுக்கோவை, தொட்டுக் காட்டுவது, தொடாமல் விட்டது

***Citation:*** *லெட்சுமி ப., (February 2021), "தமிழ்க் காப்பியங்களும் பண்பாட்டு அசைவுகளும் : ஆய்வுக்கோவை (தொட்டுக் காட்டுவதும் தொடாமல் விட்டதும்) [Tamil Epics and Cultural Movements: A Review (Touching and Not Touching)]", IIETS (Inam: International E-Journal of Tamil Studies) (ISSN:2455-0531), Vol.6, Issue 25, pp.37-15*

***

வலைப்புரட்சிகள் மிக்குவரும் இச்சூழலில் காப்பியம் என்னும் கடலின் செல்வங்களைச் சேகரிப்பதும் விவாதிப்பது மான நிகழ்வுகளைப் பல தமிழார்வ அமைப்புகள், இதழ்கள், பதிப்பகங்கள், கல்வி நிறுவனங்கள் செய்து வருகின்றன. இந்நாளில், செம்புலம் தமிழாராய்ச்சிக் காலாண்டிதழும், செம்மூதாய் பதிப்பகமும் 2015ஆம் ஆண்டில் ஸ்ரீ பராசக்தி மகளிர் கல்லூரியில் நடத்திய ஆய்வு மாநாட்டுக் கட்டுரைகள் 'தமிழ்க்காப்பியங்களும் பண்பாட்டு அசைவுகளும்' எனும் தலைப்பில் நூலாக்கம் செய்யப்பட்டுள்ளது. அதில் இடம்பெறும் 127 ஆய்வுக் கட்டுரைகள் முன்னெடுத்துச் செல்லும் ஆய்வுப்போக்குகளைப் பேசுவதாக இக்கட்டுரை அமைகிறது. தொகுப்பில் இடம்பெறும் ஆய்வுக்கட்டுரைகளை அவை சார்ந்துள்ள இலக்கிய அடிப்படையில் பிரித்துக் கொண்டு அதன் பொருண்மைகளை ஆய்வது பயனுடையதாகும். அவை பின்வருமாறு வகைப்படுத்தப்படுகின்றன.

[32] தமிழ்த்துறைத் தலைவர், யு.எஸ்.பி. மகளிர் கலை அறிவியல் கல்லூரி, தென்காசி

| இலக்கியத்தின் பெயர்/ வகைமை | ஆய்வுக்கட்டுரை எண்கள் | மொத்தம் |
|---|---|---|
| சங்க இலக்கியம் | *1, 12, 54, 67, 74, 76, 117, 118* | *8* |
| சிலப்பதிகாரம் | *4, 9, 13, 5, 21, 25, 32, 33, 35, 38, 47, 48, 53, 58, 59, 68, 72, 79, 80, 81, 82, 84, 87, 88, 91, 93, 97, 99, 101, 103, 106, 107, 110, 120, 123, 125, 126, 127* | *38* |
| மணிமேகலை | *7, 49, 86, 109, 115* | *5* |
| இரட்டைக்காப்பியங்கள் | *5, 20, 122* | *3* |
| சீவகசிந்தாமணி | *3, 55, 57, 64, 114* | *5* |
| வளையாபதி | *14, 62, 63, 111* | *4* |
| குண்டலகேசி | *85* | *1* |
| ஐம்பெருங்காப்பியங்கள் | *46, 52, 100* | *3* |
| நீலகேசி | *31, 36* | *2* |
| பெருங்கதை | *51,75,89,92* | *4* |
| கம்பராமாயணம் | *8,24,34,37,50,61,69,70,73,90,98,102,104,10, 116, 121* | *16* |
| நளவெண்பா | *6* | *1* |
| பன்னிருதிருமுறை | *2,10,23,27,60,94,124* | *7* |
| திருவிளையாடற்புராணம் | *96* | *1* |
| கந்தபுராணம் | *22* | *1* |
| பிரபுலிங்கலீலை | *105* | *1* |
| பாஞ்சாலி சபதம் | *29* | *1* |
| பாண்டியன் பரிசு | *19* | *1* |
| குடும்ப விளக்கு | *71* | *1* |
| விடுதலைபுரம் | *95* | *1* |
| கிறித்தவ இலக்கியங்கள் | *28,39,40,65,119* | *5* |
| இசுலாமிய இலக்கியங்கள் | *11,30,45* | *3* |

| | | |
|---|---|---|
| காப்பிய இலக்கியங்கள் (பொதுநிலை) | 44,77,78,83 | 4 |
| மொழி இலக்கணம் | 43 | 1 |
| இதழியல் | 112 | 1 |
| கல்வெட்டு / வரலாறு | 16,17,56 | 3 |
| ஒப்பீடு | 18,66 | 2 |
| நாட்டார் வழக்காறு | 26,41,113 | 3 |
| யாழ்ப்பாண இலக்கியம் | 42 | 1 |
| **மொத்தம்** | | 127 |

மேற்கூறிய அட்டவணை வாயிலாக சங்க இலக்கியம் முதலாக விடுதலைபுரம் ஈறாக உள்ள இலக்கியங்களில் காணலாகும் பண்பாட்டுப் பதிவுளை ஆய்வுக்குரிய தொகுப்பில் காணமுடிகிறது. சங்க இலக்கியக் கட்டுரைகள் 1, 12, 54, 67, 74, 76, 117, 118 மொழி இலக்கணத்தை பொதுவாகப் பேசும் கட்டுரை (43), இதழியலைப் பொதுவாகக் கூறும் கட்டுரை (112), நாட்டார் வழக்காற்றைப் பொதுவாகப் பேசும் கட்டுரைகள் (26, 41, 113) ஆகிய 13 ஆய்வுக் கட்டுரைகள் கருத்தரங்கப் பொருண்மைக்குள் அமையாத காரணத்தால் அவை நீங்கலாக (127-13=114) அமைந்த 114 கட்டுரைகள் இங்கு மதிப்பீடு செய்யப்படுகின்றன.

**காப்பிய ஆய்வுகள்**

காலந்தோறும் வளரும் பல்துறை ஆய்வுகளுக்கு இடமளிப்பதாகத் தமிழ்க் காப்பியங்கள் விளங்குகின்றன. குறிப்பாகத் தமிழ்க் காப்பியங்களில் முதலாவதாகவும், முதன்மையானதாகவும் போற்றப்படும் சிலப்பதிகாரத்திலிருந்து 38 ஆய்வுக் கட்டுரைகள் அமைந்திருப்பது இளங்கோவின் சொற்சிறப்பதின் சிறப்பைக் காட்டுகிறது. சிலப்பதிகாரத்தின் தொடர்கதையாக அமைவது மணிமேகலை. இவ்விரு காப்பியங்களும் கதையிலும் பாத்திரப்படைப்பிலும் ஒற்றுமையுடையனவாகத் திகழ்கின்றன. இவ்விரு நூல்களின் அடிகள்கூட ஒன்றுபட்டுத் திகழும் இடங்கள் உண்டு. சான்றாக,

'இலவந்திகையி னெயிற்புறம் போகி' (சிலம்பு. 10:31)

'இலவந்திகையி னெயிற்புறம் போகி' (மணி. 3:45)

எனும் அடிகளைக் குறிப்பிடலாம்.

ஆய்வுத் தொகுப்பில் மனிமேகலைக் காப்பியத்தில் ஐந்து கட்டுரைகளும் இரட்டைக் காப்பியங்களை முன்னிறுத்தி மூன்று கட்டுரைகளும் அமைகின்றன.

காதலுக்குக் கூட கடவுளைக் காட்டிய வரலாறு நம் மண்ணில் நிகழ்ந்துள்ளது. காமச்சுவையைத் திறம்படப் பேசிய சமணக் காப்பியம் சீவகசிந்தாமணி. ''எத்தகைய பொருளைக் கூறும்போது காமச்சுவையினை அதனுடன் இணைத்துக் கூறும் இயல்பினை இந்நூலில் சிறப்பாகக் காணலாம்'' என்கிறார் க.தினகரன் (தமிழ்க் காப்பியங்களும் பண்பாட்டு அசைவுகளும், ப.242) சிந்தாமணியிலும் ஒரு அகப்பை முகந்து கொண்டேன் என்ற கம்பரின் கூற்றுப் போல இந்நூலை மையமிட்டு ஐந்து கட்டுரைகள் அமைகின்றன.

தமிழன்னையின் கரங்களில் வளையலாகத் திகழும் காப்பியம் வளையாபதி ''கருத்துக்கள் எளிமையாகவும் தெளிவாகவும் சொல்லப்பட்டிருக்கும் பாங்கு, அறம் கூறும் முறை, இலக்கியச் சுவை ஆகியவற்றில் தலைசிறந்த காப்பியமாக விளங்குகின்றது'' (ப. லெட்சுமி, அடியார்க்கு நல்லாரின் பல்துறை அறிவு, முனைவர்பட்ட ஆய்வேடு, ப.67) இக்காப்பியத்திலிருந்து நான்கு ஆய்வுக் கட்டுரைகள் இடம் பெறுகின்றன.

புத்த தத்துவங்களை, அது கூறும் நிலையாமைக் கருத்துக்களைப் பலபடப் பேசிய நூல் குண்டலகேசி. அதில் நமக்குக் குறைவான பாடல்களே கிடைக்கப்பெற்றுள்ளமை

குறிப்பிடத்தக்கது. ஆய்வுக்குரிய தொகுப்பில் ஒரு ஆய்வு மட்டுமே அந்நூலிலிருந்து நிகழ்ந்துள்ளது.

மேற்கூறிய ஐந்து நூல்களும் ஐம்பெருங்காப்பியங்கள் என்று அழைக்கப்படுகின்றன. ஐம்பெருங்காப்பியம் என்ற குறிப்பு முதன்முதலில் மயிலைநாதர் உரையில் காணப்படுகின்றது. (நன்னூல், மயிலை நாதர் உரை, 1946, நூற்பா. 387) இவ்வைந்து நூல்களை அடிப்படையாக் கொண்டு மூன்று கட்டுரைகள் அமைகின்றன. மேலும் இத்தொகுப்பில் ஐஞ்சிறுகாப்பியங்களில் நீலகேசி, பெருங்கதை ஆகிய இருநூல்களில் ஆய்வுகள் அமைந்துள்ள நிலையில் மீதியுள்ள சூளாமணி, உதயணகுமார காவியம், யசோதர காவியம் ஆகிய மூன்று நூல்களில் ஆய்வுகள் நிகழ்த்தப் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழுக்குக் கதியாவார் இருவருள் ஒருவரான கம்பர் எழுதிய காவியம் கற்போரின் மனதைக் கவரும் ஓவியமாகத் திகழ்கிறது. பதினாறு ஆய்வுக் கட்டுரைகள் கம்பராமாயணத்தை அடியொற்றி அமைவது அதன் சிறப்பிற்கு மேலும் ஒரு சான்று.

நளனது வரலாற்றை வெண்பா யாப்பில் பாடிய புகழேந்திப் புலவரின் நளவெண்பாவில் ஒரு ஆய்வு மட்டுமே நிகழ்ந்துள்ளது.

''திருஞானசம்பந்தர் முதலாக சேக்கிழார் ஈறாக அமைந்த இருபத்தேழு அருளாளர்களின் அமுத வாக்குகளைத் திருட்டுணை கொண்டு பன்னிரு திருமுறைகளாகத் தொகுத்துள்ளமை சான்றோர் தம் எழுத்துக்களில் காணப்பெறும் வரலாற்று உண்மையாகும்'' (தமிழ்க் காப்பியங்களும் பண்பாட்டு அசைவுகளும், ப.6) செம்மேனி பெம்மானாகிய ஈசனது பெருமை பேசும் பன்னிரு திருமுறை, திருவிளையாடற் புராணம், தமிழ்க் கடவுளின் பெருமை பேசும் கந்தபுராணம் ஆகியவற்றிலும் ஆய்வுகள் குறிப்பிடத்தக்க அளவு நிகழ்ந்து வருவதை ஆய்வுக்குரிய நூல்தொகுப்பு தொட்டுக் காட்டுகிறது.

தற்காலக் காப்பியங்களான பாரதியின் பாஞ்சாலி சப்தம், பாரதிதாசனின் பாண்டியன் பரிசு, குடும்ப விளக்கு, அறிவரசனின் விடுதலைபுரம் ஆகிய படைப்புகளிலும் ஓரோர் ஆய்வுகள் நிகழ்ந்து வந்துள்ளதைக் காணமுடிகிறது.

தேம்பாவணி, திருத்தொண்டர் காப்பியம், இயேசு காவியம், இரட்சணிய யாத்திரிகம் ஆகிய கிறித்துவ சமயக் காப்பியங்களிலும் ஆய்வுகள் அகன்று வருவதும், திருமணி மாலை, சீறாப்புராணம், ஆயிரமசலா (அதிசய புராணம்) ஆகிய இஸ்லாமிய இலக்கியங்களும் ஆய்வுலகில் அரும்பத் தொடங்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. மேற்கூறிய ஆய்வுகளைப் பகுக்கும்போது அவை கீழ்க்கண்ட ஆய்வுக் களங்களில் கிளை பரப்பியுள்ளமையை அறிய முடிகிறது.

| **காப்பிய ஆய்வுப் பொருண்மை** | **ஆய்வுக்கட்டுரை எண்கள்** | **மொத்தம்** |
|---|---|---|
| காப்பியங்களில் பண்பாடும் வாழ்வியலும் | 2,3,5,6,7,8,10,11,13,14,22,23,24,28,31,32,33,36,37,39,44,48,53,52,59,60,62,63,64,65,68,71,77,78,80,81,85,90,91,92,93,94,96,97,98,99,100,102,103,105,107,108,111,116,120,122,124,125,126,127, | 60 |
| காப்பிய மாந்தர் பண்பு நலன் | 9,19,20,29,34,46,50,57,58,61,69,70,75,83,87,106,110,115 | 18 |
| காப்பியச்சுவை/ கூறுகள்/ உத்தி/ மரபு/ நோக்கம் | 21,35,49,51,55,73,82,86,95,121, 123 | 11 |
| காப்பியம் உணர்த்தும் வரலாறு | 15,16,17,56,109 | 5 |
| காப்பிய மொழிநடை/ உருவான வரலாறு | 40, 47, 72, 101 | 4 |
| காப்பியங்களில் பல்துறைச் செய்திகள் | 79,84,89,114 | 4 |

| | | |
|---|---|---|
| காப்பியப் படைப்பு/ படைப்பாளர் ஆளுமை | 27,30,45,104,119 | 5 |
| காப்பியங்களில் பிற இலக்கியத் தாக்கம் | 38,88,119 | 3 |
| காப்பிய ஒப்பாய்வு | 18,66,102 | 3 |
| காப்பியங்களில் நாட்டுப்புறவியல் கூறுகள் | 4,25 | 2 |
| காப்பியங்களில் புலம் பெயர்வுத் தாக்கம் | 42 | 1 |
| **மொத்தம்** | | **114** |

மேற்கண்ட அட்டவணை வாயிலாகக் காப்பியங்கள் மீதான பண்பாட்டு ஆய்வுகளே அதிகமாக நிகழ்ந்துள்ளன என்பதை ஆய்வுத் தொகுதியில் இடம்பெறும் 59 கட்டுரைகள் உறுதி செய்கின்றன.

காப்பியத்தின் கதைமாந்தர்கள் மனித வாழ்வில் நெருக்கமான பிணைப்பு உடையவர்களாகத் திகழ்வதால் 18 ஆய்வுக் கட்டுரைகள் இந்நோக்கில் அமைந்துள்ளன.

காப்பியத்தின் நோக்கம், மரபு, சுவை ஆகியன வாசகரைத் தூண்டும் விதமாக அமைந்தால் மட்டுமே அக் காப்பியம் வெற்றிபெற முடியும் என்பதற்கிணங்க, 12 கருத்தாளர்கள் அவை குறித்துப் பேசியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

காப்பியங்களில் பல்துறைச் சிந்தனை குறித்த ஆய்வுகள் பெருக வேண்டியதன் தேவையை இத்தொகுப்பு புலப்படுத்துகிறது.

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ்மொழியில் பெயர்த்தல் வேண்டும் என்ற பாரதியின் கூற்றுக்கிணங்க, நம் நாட்டுக் கலைச் செல்வங்களைப் பிற மொழியில் பெயர்ப்பது இன்றியமையாத தேவையாகிறது. ஆய்வுத் தொகுப்பில் மூன்று ஆங்கிலக் கட்டுரைகள் அமைந்திருப்பதும் அவை ஒப்பீட்டு நோக்கில் அமைந்திருப்பதும் எண்ணத்தக்கவை. யாழ்ப்பாணர் பண்பாட்டில் தமிழ் இசை பெறும் இடத்தை ஓர் ஆய்வுக் கட்டுரை விளக்கியுள்ளமை இத்தொகுதியில் தனியிடம் பெறுகிறது.

**துணைநின்றன**

அப்பாத்துரையார் கா., 2006, இந்திய நாகரிகத்தில் திராவிடப் பண்பு, மீனா கோபால் பதிப்பகம், சென்னை.

ஆனந்தகுமார் பா. (தொ.ஆ), 2016, உரை மாலை, தென்னக ஆய்வுமையம், சென்னை.

சதாசிவம் சு, (ப.ஆ)., 2015, தமிழ்க் காப்பியங்களும் பண்பாட்டு அசைவுகளும், செம்மூதாய் பதிப்பகம், சென்னை.

தனிநாயகம் அடிகள், தமிழர் பண்பாடும் அதன் சிறப்பு இயல்புகளும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.